FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8348091

1. District மாவட்டம் திண்டுக்கல் PS காவல்நிலையம் பழனி மகளிர் Year ஆண்டு 2025 FIR No முத.அ. எண் 11 Date நாள் 21-11-2025

2. (i) Act சட்டம் The Prevention of Corruption Act (Amendment) 2018 Sections பிரிவுகள் 7

(ii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் 20-11-2025 Date from நாள் முதல் Date to நாள் வரை

Time Period நேர அளவு 15.30 hrs Time from நேரம் முதல் Time to நேரம் வரை

(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21-11-2025 Time நேரம் 07.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol II Time நேரம் 07.00 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி தட்டச்சு படிவம் மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அலுவலகம் 2.5 கி.மீ தென்கிழக்கு.

Beat Number முறைக் காவல் எண்

(b) Address முகவரி தாட்கோ பதிவாளர் அலுவலகம், மதுரைரோடு, பழனி.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. திலகராமன்

(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் அப்பாவுசாமி,

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 48 வயது

(d) Nationality நாட்டினம் இந்தியர்

(e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue வழங்கப்பட்ட நாள்

Place of Issue வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் விவசாயம்,

(g) Address முகவரி எண் 124, பங்களா தெரு, எ.ஆவுடையாபுரம், மதுரைரோடு காமாட்சி புரம் கிராமம், பழனி வட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு. கோபிகிருஷ்ணன், தாட்கோ பதிவாளர், மதுரைரோடு தாட்கோ பழனி.

(2) திரு. தினா, பதிவு அலுவலர்கள் தாட்கோ பழனி, மதுரைரோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

அனுப்பப்பட்டது :-

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது .

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21-11-2025 at 09.00 hrs.

Name பெயர் .....
Rank நிலை .....No. எண் .....

FIR in Cr.No.11/AC/2025/CP, U/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018.

நான் இன்று 21.11.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு செங்கல்பட்டு மாவட்ட கருவூல மற்றும் கணக்குகளின்படி பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிருவாகவசதி ஆணையை செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, ஈசூர் கிராமம், ரெ.124, பங்காரு சுப்பையர் ரோடு, என்ற முகவரியில் வசிக்கும் அப்பாசாமி மகன் A.சிவராமன் என்பவர் தட்டச்சு பிழை ஒன்றினை என்னிடம் கொடுத்தார். அந்த பிழை மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், A.சிவராமன், வயது-48, த/பெ. அப்பாசாமி, ரெ.124 பங்காரு சுப்பையர் ரோடு, ஈசூர் கிராமம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். பெறுநர், ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, செங்கல்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம். ஐயா, நான் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுக்காவில் உள்ள ஈசூர் கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமாக ஈசூர் கிராமத்தில் இரண்டு ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. நான் "சிவம் சமூக நல அறக்கட்டளை" என்ற பெயரில் சமூகநல அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி அதனை நடத்தி வருகிறேன். என் மனைவி திருமதி.கலா என்பவரது பெயரில் 15 சென்ட் புஞ்சை நிலம் ஈசூர் கிராமத்தில் உள்ளது. என் மனைவி பெயரில் உள்ள 15 சென்ட் நிலத்தில் 3 சென்ட் இடத்தினை நான் நடத்தி வரும் "சிவம் சமூகநல அறக்கட்டளை"-க்கு தானமாக கொடுக்க முடிவு செய்துள்ளார். என் மனைவி சார்பாக நான் மதுராந்தகம் சென்று மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண பதிவு செய்ய ஆவணங்கள் தயார் செய்யும் திரு.சிவா என்பவரை 12.11.2025-ம் தேதி அணுகி விவரம் சொல்லி தான ஆவணம் தயார் செய்ய சொன்னேன். அவரும் தயார் செய்தார். மேலும் அவர் கூறியபடி நான் ஆவண பதிவிற்கு தேவையான பணம் ரூ.3,310/-ஐ ஆன்லைனில் செலுத்தினேன். பின்னர், அவர் வரைவு ஆவணத்தை ஆன்லைனில் பதிவேற்றம் செய்து 13.11.2025-ஆம் தேதி காலை 10.00-11.00 மணிக்கு மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரத்தினை பதிவு செய்ய முன் பதிவு செய்தார். பத்திர பதிவிற்காக நான் என் மனைவி மற்றும் சாட்சிகளுடன் 13.11.2025-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம். ஆனால் அன்றைய தினம் அந்த ஆவணம் சார் பதிவாளரால் பதிவு செய்யப்படவில்லை. நான் அன்று மாலை அந்த அலுவலகத்தில் பணியிலிருந்த சார் பதிவாளரை சந்தித்து ஆவண பதிவு குறித்து கேட்டபோது அவர் என்னிடம் வரைவு ஆவணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், மேலும் மாவட்ட பதிவாளரிடம் கலந்து பேசி பின்னர் பதிவு

செய்கிறேன் என கூறி என்னை அனுப்பிவிட்டார். எனது ஆவணம் பதிவு செய்யப்படாத நிலையில் நான் 17.11.2025-ஆம் தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று அன்றைய தினம் சார் பதிவாளராக பணியில் இருந்த திரு.கார்த்திகேயன் என்பவரை சந்தித்து எனது ஆவணம் சம்மந்தமான விவரத்தை சொல்லி பதிவு செய்து தருமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் என்னிடம் இந்த ஆவணத்தை இதுவரை நான் பார்வையிடவில்லை. இதனை ஆராய்ந்து அனுமதி பெற்று பதிவு செய்து கொடுப்பதாக சொல்லி என்னை இது தொடர்பாக சிவாவிடம் விவரம் கேட்டுத் தெரிந்துகொள்ளுமாறு சொன்னார். அதன் பின்னர் நான் திரு.சிவாவை சந்தித்து விவரம் சொன்னேன். சிவா என்னிடம் சார் பதிவாளர் ரூ.25,000/- கொடுத்தால்தான் எனது பத்திரத்தை பதிவு செய்வார் என சொன்னார். என்ன இவ்வளவு பணமா என கேட்டேன் பிறகு நான் சார் பதிவாளரிடம் இது குறித்து கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டேன். நான் மீண்டும் 19.11.2025-ம் தேதி மதியம் சுமார் 02.45 மணிக்கு மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று அங்கு சார் பதிவாளராக பணியில் இருந்த திரு.கார்த்திகேயன் அவர்களை சந்தித்து ஆவண பதிவு சம்மந்தமாக கேட்டேன். அதற்கு சார் பதிவாளர் என்னிடம் இன்று வேலை பளு அதிகமாக இருப்பதால் நாளை மாலை 03.00 மணிக்கு மேல் தன்னை வந்து சந்திக்குமாறு சொன்னார். மேலும். வரும்போது ஆவணம் தயார் செய்த சிவாவையும் உடன் அழைத்து வருமாறு சொன்னார். சார் பதிவாளர் சொன்னபடி நான் நேற்று 20.11.2025-ம் தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு திரு.சிவாவை அழைத்து கொண்டு மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று அங்கு பணியில் இருந்த சார் பதிவாளர் திரு.கார்த்திகேயன் என்பவரை சந்தித்தோம். நான் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த ஆவணம் விவரம் தொடர்பாக சார் பதிவாளரிடம் தெரிவித்து ஆவணத்தை பதிவு செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு என்னிடம் சார் பதிவாளர் என்னிடம் எனது ஆவணத்தை பார்வையிட்டு விட்டதாகவும் DR-யிடம் கலந்து ஆலோசித்து விட்டதாகவும். நான் பார்மாலிட்டி எதுவும் செய்யாததால் கிடப்பில் உள்ளதாகவும் சொன்னார். பின்னர் அவர் என்னிடம் பணம் ரூ.25,000/-ஐ கொண்டு வந்து கொடுத்தால் உடன் எனது ஆவணத்தை பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். அதற்கு நான் அவரிடம் ஆவண பதிவிற்கு தேவையான பணத்தை ஆன்லைனில் கட்டிவிட்டதாக சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் அது அரசாங்கத்திற்கு சேர வேண்டிய பணம் என்றும் அவர் கேட்டும் பணம் பதிவு செய்து கொடுப்பதற்காக

அவருக்கு சேர வேண்டியது என்றும் சொன்னார். அப்போது என்னுடன் வந்திருந்த ஆவணம் தயார் செய்த சிவாவும் பணத்தை தயார் செய்து கொடுத்தால் தான் ஆவணம் பதிவு செய்யபடும் என்று சார் பதிவாளருக்கு ஆதரவாக சொன்னார். பின்னர் நான் சார் பதிவாளரிடம் 25,000/- மிக அதிகமாக இருக்கிறது. இடத்தினுடைய மொத்த மதிப்பே ரூ.30,000/- தான் சார் என்று சொன்னேன். அதன் பின்னர் அவர் ரூ.15,000/- தருமாறு சொன்னார். மேலும், நான் கொடுக்க வேண்டிய பணத்தில் ரூ.10,000/-ஐ ஆவண பதிவிற்கு முன்னர் கொண்டு வந்து கொடுக்குமாறும், பதிவுக்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தினை ஒப்படைக்கும்போது ரூ.5,000/- கொடுக்குமாறும் சொன்னார். அப்போது என்னுடன் வந்திருந்த திரு.சிவா என்னிடம் "சார் உங்களுக்கு மட்டும்தான் ரொம்ப குறைஞ்ச செலவுல பண்ணிக் கொடுக்க சம்மதிச்சி இருக்கார், உடனே பணத்தை ரெடி பண்ணி கொண்டு வந்து விடுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். நான் வீட்டிற்கு சென்று என் மனைவியிடம் சார் பதிவாளர் ஆவணத்தினை பதிவு செய்ய பணம் கேட்ட விவரத்தினை தெரிவித்தேன். அதற்கு அவர் என்னிடம் சார் பதிவாளருக்கு லஞ்சம் கொடுத்து பத்திரம் பதிவு செய்ய விருப்பம் இல்லை என தெரிவித்தார். எனக்கும் லஞ்சம் கொடுத்து பத்திரம் பதிவு செய்து கொள்ள விருப்பம் இல்லை. மேலும் என் மனைவி அவர் சார் பார்பாக லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்க சொன்னார். அதன்படி நான் இன்று 21.11.2025 தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். மதுராந்தகம் சார் பதிவாளர் முதல் தவனை லஞ்ச பணமாக கேட்ட ரூ.10,000/-ஐ கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு Sd.xxxxxxxx Submitted, Received the above computer typed complaint on 21.11.2025 at about 07.00 Hrs., and preliminary verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Chengalpattu Vigilance and Anti-Corruption in Cr.No.11/AC/2025/CP, U/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 21.11.2025 at 08.00 Hrs., and took investigation. The original FIR along with the Complaint was sent to the Hon'ble Principal and Sessions Court, Chengalpattu.

21/11/25